294

குழந்தை

*

ஆராவயல்

ராம. அரு. ராம. இராமநாதன் செட்டியார்

குமாரன் திருவளர் செல்வன்

நாச்சியப்பன் (தண்ணீர்மலை)

புதுமை மலர்.

7—11—54.

*

"...நேசி"

... பதிப்பகம்

... இராமனாதபுரம் ஜில்லா

REGISTRAR O... 12 NOV 1954 MAD...

294

S1
N54
68805

குழந்தை

*

ஆராவயல்

ராம. அரு. ராம. இராமநாதன் செட்டியார்

குமாரன் திருவளர் செல்வன்

நாச்சியப்பன் (தண்ணீர்மலை)

புதுமை மலர்.

7—11—54.

*

"நேசி"

நன்னெறிப் பதிப்பகம்

நேமத்தான்பட்டி : : இராமனாதபுரம் ஜில்லா

நன்றியுரை.

'குழந்தை' என்னும் இவ்வினிய நூலை, தம் குழந்தை நாச்சியப்பன் என்ற (தண்ணீர்மலை) புதுமை மலராக வெளியிட ஆர்வமூட்டியவர், ஆ[illegible]ாவயல் 'கருணை வாரிதி,' திரு. ரா[illegible]ம. அரு. ராம. இராமநாதன் செட்டியார் அவர்கள் ஆவர். தமிழன்பும், உயர்குடிப் பண்பும், பரந்த உள்ளமும், சிறந்த ஈகையும் சான்ற இராமநாதருக்கு எனது உளங் கலந்த நன்றி உரியதாகுக.

"நேசி"

நன்னெறிப் பதிப்பகம்.

நூல்முகம்.

‘குழந்தை’ இந்நூலின் பெயர். குழந்தைகளின் கோதற்ற குணநலன்களை தெள்ளத் தெளிய எடுத்துக்காட்டும் ஒரு சிறந்த கண்ணாடி. பல உயரிய செயல்களை குழந்தைகளிடமிருந்து தெரிந்துகொள்ளவேண்டுமென்ற அவாவைத் தூண்டுவது இந்நூல்.

ஆடல் அழகனை வணங்கி ‘குழந்தை’ என்னும் இவ்வரிய நூலை திருவளர் செல்வன் இராம. நாச்சியப்பன் - தண்ணீர்மலை காப்புக் கட்டுப் புதுமை நன்னாள் அன்பளிப்பு மலராக தமிழுலகிற்கு அளிக்கிறேன். அன்பர்கள் ஆதரவும், பரம்பொருளின் துணையும் எனது முயற்சியை முன்னின்று ஊக்குமாக!

“நேசி”

நன்னெறிப் பதிப்பகம்.

புதுமை நன்மொழி

*

"வம்மின் அடிகாள் வம்மின் பெரியீர்
வம்மின் புலவீர் வம்மின் அனைவரும்
தம்மின் உமது தரும்வாழ்த் துரையை
எங்கென எதற்கென யார்க்கெனல் வேண்டுமோ
நம்குலச் செல்வர் நனிநா கரிகர்
புன்முறு வலைக்கொள் நன்முகங் கொண்டவர்
மன்னுயிர்க் கிரங்கும் தண்ணரு ளாளர்
நுண்மாண் நுழைபுலம் உண்மா ரஸிகர்
பண்பா டனைத்தும் படிவம் கொண்டென
நண்பால் யாரும் நவிற்றும் உருவினர்
யாரென எதற்கென ஏதும்வின வாது
காரெனக் கொடுக்கும் கையினை உடையார்
ஆரா வயலெனும் சீரா ஊருறை
இராமநா தப்பெயர் எழிலோர் தமக்கு
வாழ்க்கைத் துணையெனக் கொண்ட மனைவி
நற்குணம் அனைத்தும் பொற்பொடுங் கொண்ட

வள்ளி யம்மையாம் மாண்புறும் ஆச்சி
செயற்கருந் தவத்தாற் சீரிதிற் பெற்ற
அரியின் குருநிலையை அன்னான் அவன்பேர்
நாச்சி யப்பனென நவி[illegible] தண்ணீர்
மலைக்கு நடக்கும் மாண்புறு புதுமை
விழாவினைக் குளிர விழிகளாற் காண்போம்
இந்தநாற் றாண்டின் இயல்பினைக் கொளாமற்
பழந்தமிழ்ப் பண்பாற் பயனுறு குடும்பம்
ஒன்றினைக் காண்ப தோவாம் புதுமை
அத்தகு மனைக்குள் அணிகல மாகிய
செல்வன் புதுமைச் சிறப்பள விற்றே!
இளைஞன் எல்லா நலமும் பெற்றுப்
பல்லூழி காலம் பாரினில் வாழ்க!
வாழ்கபல் ஊழி வாழ்கபல் ஊழியென் (று)
ஊழி முதல்வனாம் ஒருவனை
வணங்கி வேண்டி வாழ்த்துதும் யாமே"

குழந்தை

குழந்தைகளைப்போல் தாங்கள் ஆகவேண்டு மென்று ஞான மார்க்கத்திலே செல்லும் பிரயாணிகள் முயன்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் உலக விவகாரங்களில் மூழ்கிக் கிடக்கும் நாமோ, நம்மைமப்போல் குழந்தைகளை ஆக்கிவிட முயன்று கொண்டிருக்கிறோம்.

குழந்தைகளிடத்தில் ஞானிகள், எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராத அன்பானது ஆராவமுதாகத் தேங்கிக் கிடப்பதைக் காண்கிறார்கள். ஆனால் உள்ளேயிருக்கும் தேங்காயை விட்டுவிட்டு வெளியே இருக்கும் மட்டையை மட்டும் பிடித்துக் கொண்டு அதற்காக சதா சர்வகாலமும்

உழன்று கொண்டிருக்கிற நாமோ, அந்தக் குழந்தைகளிடத்தில் அறியாமையையும் அசட்டுப் பிடிவாதத்தையுமே காண்கிறோம்.

❁ ❁ ❁

குழந்தைகள் நம்மிடையிலே, ஆரவாரத்தின் மத்தியிலே, அந்த ஆரவாரத்தை இனிமை யுடையதாகச் செய்துகொண்டு, கொச்சை மொழியிலும் குறும்புச் செயலிலும் அழகுடையனவாய், உடலிலே அழுக்குப் படிந்திருந்தாலும், உதட்டிலே புன்சிரிப்பு மலர்ந்துகொண்டிருக்க நடமாடுகின்றன.

❁ ❁ ❁

குழந்தைகள் ஆடும்போதும், பாடும்போதும் உண்ணும்போதும், உறங்கும்போதும் அவைகளிடமிருந்து நாம் எத்தனையோ பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம்.

ஆயினும் நாம் கற்றுக்கொள்ள மறுக்கிறோம்.

நாமெல்லோரும், படிப்பாளிகள், உழைப்பாளிகள், விஞ்ஞானிகள், அரசியல் வாதிகள் ஆகிய எல்லோரும் குழந்தை மனமுடையவர்களாகி விட்டோமானல் உலகத்திலே யுத்தம் ஏற்படாது; யாரும் யாருடைய சுதந்திரத்தையும் அபகரித்துக் கொள்ளமாட்டார்கள்; ஒருவரை அழித்து மற்ருெருவர் ஆக்கம் பெறமாட்டார்; எங்கும் இன்பம் நிலவிடும்; எல்லோரும் எல்லோருடைய நலனையும் நாடுவர்.

குழந்தை மனம், பனித்துளிபோல் தூய்மையானது; நில வொளியைப்போல்

தண்மை செய்யும் தன்மையது; வானவில் போல் மாறுபடும் பல உணர்ச்சிகளுடையது சூரியனைப்போல் சமதிருஷ்டி யுடையது; நல்ல இருட்டிலே வெளிச்சம் கொடுக்கும் நட்சத்திரத்தைப்போல் துக்கத்திலே மகிழ்ச்சியை அளிக்கும் சக்தி யுடையது. இந்தக் குழந்தை மனம் உலகத்திலே அனைவருக்கும் ஏற்பட வேண்டும்.

❁ ❁ ❁

குழந்தைகள், விடியற்காலையிலேயே தூக்கத்திலிருந்து விடுதலை பெற்றுக்கொண்டு விடுகின்றன. தாங்கள் நித்திரையிலிருந்து எழுந்து விட்டதைப்போல் மற்றவர்களையும் நித்திரையிலிருந்து எழுப்பி விடுகின்றன. குழந்தைகளைப்போல் நாமும் விடியற்காலை துயிலைத் துறந்து ஆரோக்கியம் பெற முயல வேண்டும்.

குழந்தைகள், நாவின் ருசிக்காக ஆகாரம் உட்கொள்வதில்லை; பசிக்காகவே உட்கொள்கின்றன. பசிக்கிறபோதுதான் தங்கள் குரலை எழுப்புகின்றன. ஆனால் உருவத்திலே வளர்ந்துவிட்ட நாமோ நமது ஆகார விஷயத்தில் நாவின் ருசிக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கிறோம் பசியைத் தீர்த்துக் கொள்வதற்காக ஆகாரத்தைத் தேடுகிறோமில்லை. ஆகாரத்தைத் தீர்த்து விடுவதற்காகப் பசியைத் தருவித்துக் கொள்கிறோம்.

தூக்கத்திலே, இருட்டிலே, பெரியவர்கள் ஆறுதல் காண்கிறார்கள்! விழிப்பிலே, வெளிச்சத்திலே, குழந்தைகள் ஆர்வங் காட்டுகின்றன!

குழந்தைகளுக்கு அச்சமென்பது தெரியவே தெரியாது. கட்டெறும்பைப் பிடிக்கின்றன; விஷப்பாம்பைத் தொடுகின்றன. அவை இடியோசையை கேட்டு உடல் நடுங்குவதில்லை. அமாவாசை இருட்டைப் பார்த்து அலறுவதில்லை. நாம்தான், அதைத் தொடாதே, இதைப் பாராதே, அங்கே போகாதே, இங்கே வராதே என்று அடிக்கடி எச்சரிக்கை செய்து அவைகளை பயங்காட்டி வைக்கிறோம். நம்மிடத்திலே தேங்கிக் கிடக்கும் அச்சத்தை அவைகளுக்கு மெது மெதுவாக ஊட்டுகிறோம். அவைகளிடத்திலேயுள்ள அஞ்சாமை வறண்டுபோய் அந்த இடத்திலே அச்சம் தோன்றுமானால் அதற்காக நம்முடைய பிற்காலத்தில் நாம் வருத்தப்பட்டு என்ன பயன்?

❀ ❀ ❀

குழந்தைகள் பொது நோக்குடையவை. வெள்ளைப் புறாவும் கறுப்புக் காக்கையும்

அவைகளுக்கு ஒன்றுதான்; செங்கல்லும் வைரக்கல்லும் ஒன்றுதான்; அரசனும் ஆண்டியும் ஒன்றுதான்; ஆணும் பெண்ணும் ஒன்றுதான்; நெற் குவியலும் குப்பைமேடும் ஒன்றுதான்; ஆழ்ந்த கிணறும் உயர்ந்த கூரையும் ஒன்றுதான். எல்லோருக்கும் எல்லாவற்றிற்கும் தங்கள் தூய மனத்தில் தாராளமாக இடங் கொடுக்கின்றன; பரிவு காட்டுகின்றன. தான் வேறு மற்றவர்கள் வேறு என்ற வேற்றுமை எண்ணமே அவைளுக்குக் கிடையாது.

❁ ❁ ❁

இரண்டு குழந்தைகள் நன்றாக விளையாடிக் கொண்டிருக்கின்றன. திடீரென்று சண்டை வந்துவிடுகின்றது. ஒன்றை யொன்று அடித்துக் கொள்கின்றன.

அல்லது 'டூ' 'கா' என்று சொல்லிக் கொண்டு விலகி விடுகின்றன. சிறிது நேரத்திற்கெல்லாம் தங்கள் சண்டையை மறந்துவிட்டு, ஒன்று சேர்ந்து, பழய மாதிரி விளையாடத் தொடங்கிவிடுகின்றன. அவைகளுக் கேற்படுகிற கோபதாபங்க ளெல்லாம் விநாடி நேரந்தான். பெரியவர் களாகிய நாம் அப்படியல்லவோ இருக்க வேண்டும்?

குழந்தைகள், கட்டுப்பாட்டை அறவே வெறுக்கின்றன. தங்கள் பிரியம்போல் ஆடி ஓடுவதைத்தான் விரும்புகின்றன. ஒரு வீடு எவ்வளவு விசாலமுடையதா யிருந்த போதிலும், அதில் குழந்தைகள் புழங்க விரும்புவதில்லை என்பதைக் கவனித் திருக்கிறீர்களா? தோட்டத்திலே திறந்த

வெளியிலேதான் அவை அதிகமான குதூகலத்தைக் காண்கின்றன. அதாவது அவை சுதந்திர வாழ்க்கையிலும் இயற்கையோடமைந்த வாழ்க்கையிலும் இச்சையுடையவை என்பதே கருத்து. ஆனால் நாமோ திறந்த வெளியைக் கண்டு பயப்படுகிறோம்.

⊕ ⊛ ⊕

குழந்தைகளுக்கு எண்ணம் குறைவு. செயல் அதிகம் இதனால்தான் அவை வளர்ச்சியடைகின்றன. நாமோ எண்ணத்தை வளர்த்துக்கொண்டிருக்கிறோம். செயலைக் குறைத்துக் கொண்டு விட்டோம். வாழ்வானது, ஊற்றுப் பெருக் கெடுத் தோடாமல், குட்டை நீராகத் தேங்கிக் கிடக்கிறது. குட்டை நீரில் கொசுக்கள் மலிந்திருப்பதைப்போல்

நம்முடைய வாழ்க்கையிலும் விகல்ப எண்ணம், விபரீத புத்தி எல்லாம் மலிந்து கிடக்கின்றன. இவைகளை அகற்றி வாழ்கையைத் தூய்மையுடையதாகச் செய்துகொள்ள, குழந்தைகளைப் பின் பற்றுவோமாக!

68805

ஸ்ரீ முருகன் பிரஸ், கண்டனூர்.

51
N54

ஸ்ரீ முருகன் பிரஸ், கண்டனூர்.